Dt.: Crl. Misc. Petition

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

**C.C. No. 391 /2018**

DEPOSITION OF WITNESS : P.W.1

| | | | |
|---|---|---|---|
| Name | : **நாகராஜ்** | Father's Name | : **குருசாமி** |
| Village | : ராமலிங்காபுரம் | Taluk | : |
| Religion | : | Age | : |
| Calling | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.06.2022

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும்,. 2ம் எதிரி மற்றும் 4ம் எதிரிகள் என் உடன்பிறந்த சகோதிரிகள் ஆவரர். 1ம் எதிரி 2ம் எதிரியின் கணவர் ஆவார். 3ம் எதிரி 4ம் எதிரியின் கணவர் ஆவார். எங்களுக்கு சொந்தமான பூர்வீக சொத்து ராமலிங்கபுரத்தில் உள்ளது. அது 4 செண்ட் ஆகும். அந்த இடத்தில் நான் என் சொந்த பணத்தில் வீடு கட்டினேன். இதற்கு முன்பே என் தந்தை, என் சகோதரிகளுக்கு தனியாக 240 செண்ட் ஒதுக்கிவிட்டார். இந்நிலையில் என் சகோதிரிகள் நான் கட்டிய வீட்டில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்தார்கள். கடந்த 29-05-2018ம் தேதி நான் மதியம் 2 - 3 மணியளவில் நான் தோட்டத்தில் வேலை பார்த்துக்கொண்டியிருந்தேன். அப்போது எதிரிகள் 4 பேரும் வந்தார்கள். என்னிடம் வீட்டில் பங்கு தரவில்லை என்றால் நாங்கள் உன் வீட்டில் சோறு ஆக்குவோம் என்று சத்தம் போட்டதால் பிரச்சனை ஏற்பட்டது . 1ம் எதிரி சாமிக்கன்னு கம்பை எடுத்து என் வாயில் அடித்ததில் என்னுடைய கீழ் வரிசையில் உள்ள என் பல் உடைந்துவிட்டது. 3ம் எதிரி சக்திவேல் என்னை பிடித்து இழுத்து அடித்தார் . என் சகோதிரிகள் இருவரும் அப்போது என்னை அடித்தார்கள். அவர்கள் என்னை ஆபாசமான வார்த்தையால் பேசினார்கள். எனக்கு காயம் ஏற்பட்டதால் நான் 108 ஆம்புலன்ஸ் மூலமாக க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன் . அப்போது கண்டமனூர் போலீசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு.வி.** இல்லை.